# 10 தங்கத்தேர்

**இடம்** : பல்லவராயர் அரண்மனை

**காலம்** : காலைநேரம்

**பாத்திரங்கள்** : புலவர், பல்லவராயரின் மகன், பல்லவராயர், அவர் மனைவியார்

(பல்லவராயர் ஒரு சிற்றரசர்; பெரியவீரர்; புலவர்களுக்கு அள்ளி வழங்குபவர். ஒரு நாள் வறுமையில் வாடிய புலவர் ஒருவர் பல்லவராயரைக் காண வந்தார். அப்போது அவரின் சிறிய மகன் தெருவில் தங்கத்தேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தான்.)

**புலவர்** :- யாரப்பா நீ? இதுதானே பல்லவராயரின் அரண்மனை?

**சிறுவன்** :- வணக்கம் ஐயா! நான் பல்லவராயரின் மகன். இதுதான் எங்கள் இல்லம். நீங்கள் யாரெனத் தெரியவில்லையே?

**புலவர்** :- மகனே நான் ஒரு தமிழ்ப் புலவன். பல்லவராயரைப் புகழ்ந்து பாடிப் பரிசு பெறலாம் என்று வந்துள்ளேன்.

**சிறுவன்** :- ஐயா நீங்கள் தமிழ்ப் புலவரா? ஆகா! உங்கள் வருகைக்கு இவ்வீடு புண்ணியம் செய்திருக்க வேண்டும். என் தந்தையார் வெளியூர் சென்றுள்ளார். உள்ளே வாருங்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**புலவர்** :- (திடுக்கிட்டு) பல்லவராயர் ஊரில் இல்லையா? அவரைக் காணக் காடும் மலையும் கடந்து வந்தேனே!

**சிறுவன்** :- தந்தையார் இல்லாவிட்டால் என்ன? என் அன்னையார் இருக்கிறார். நான் இருக்கின்றேன். உள்ளே வந்து அமருங்கள், ஐயா.

(புலவர் உள்ளே சென்று சிறுவன் காட்டிய இருக்கையில் அமர்கிறார்)

**புலவர்** :- மகனே! தந்தைக்கு ஏற்ற நல்ல மைந்தன் நீ, உன்னைப் பெற அவர் தவம் செய்திருக்கின்றார். உன் தந்தையாரின் கொடைச்சிறப்பை அறிந்து அவரிடம் பரிசு பெற்று என் வறுமையைப் போக்கிக் கொள்ள வந்தேன்.

**சிறுவன்** :- அப்படியா? மிகவும் கவலையாக உள்ளது.

**புலவர்** :- மகனே என் வீட்டில் அடுப்பு எரிந்தே பல நாட்கள் ஆயிற்று. குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றார்கள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே! நான் என்ன செய்வேன்!

**சிறுவன்** :- புலவர் பெருமானே! தங்கள் வறுமையை அறிந்து மிகவும் வருந்துகின்றேன். தந்தையார் இல்லாவிட்டால் என்ன? இதோ இந்தத் தங்கத்தேரை நான் பரிசாகத் தருகின்றேன். பெற்றுக் கொள்ளுங்கள்.

(அவனுடைய கொடைப் பண்பைக் கண்டு புலவர் ஆனந்தக் கண்ணீர் விட்டார்.)

**புலவர்** :- குணத்தின் குன்றே! உன் அன்பைப் பாராட்டுகின்றேன். நீ கூறிய வார்த்தையே போதும். இந்தத் தேரை நீயே வைத்து விளையாடு.

**சிறுவன்** :- பெரியவரே! கொடுத்ததை வாங்கும் பண்பு எங்களுக்கு இல்லை. அது உங்களுக்கே சொந்தமாகும். அம்மா, தாங்கள் என்ன சொல்கின்றீர்கள்.

**அரசியார்** :- அதோ, உன் தந்தை வருகின்றார். அவரிடமே கேட்போம்.

(பல்லவராயர் வருகிறார்.)

**புலவர்** :- (அகமும் முகமும் மலர) வள்ளலே! உங்களைக் கண்டு வறியவன் பொற் குவியல் பெற்றதைப் போல் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் ஒரு தமிழ்ப் புலவன். உங்களிடம் பரிசு பெற வந்துள்ளேன்.

**பல்லவராயர்**:- தமிழ்ப் புலவரே! உங்கள் வரவு நல்வரவாகுக! உங்களை வரவேற்று உபசரிக்க நான் இல்லாமல் போனதற்கு வருந்துகின்றேன்.

**புலவர்** :- நீங்கள் இல்லாவிட்டால் என்ன? உங்கள் அருமை மகன் அன்புடன் வரவேற்றுப் பரிசும் தந்து விட்டான், (தங்கத் தேரைக் காட்டுகிறார்).

(கணவரும் மனைவியும் தம் மகனைப் பெருமிதத்துடன் பார்க்கின்றார்கள்).

**சிறுவன்** :- ஆம் அப்பா! பாவம், புலவர் குடும்பம் பட்டினியால் வருந்துகின்றதாம். எனவே தான் நான் தங்கத் தேரைக் கொடுத்தேன், புலவர் வாங்க மறுக்கிறார் அப்பா!

**புலவர்** :- குழந்தைதானே? தங்கத்தின் மதிப்புத் தெரியாது தந்து விட்டான். திருப்பிக் கொடுத்தால் வாங்க மறுக்கிறான். அரசே! என்னை மன்னித்து இதனை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக



**பல்லவராயர்**:- புலவரே! என் மகன் மதிப்பறிந்தே பரிசு தந்திருக்கின்றான். தங்கத்திலும் உங்கள் தமிழ்ப் புலமை பெரிது. அது உங்களுக்கே உரியது, ஏற்றுக் கொள்ளுங்கள்.

**புலவர்** :- வள்ளலே! உங்கள் கொடைச்சிறப்பை எப்படிப் புகழ்வேன்! அள்ளிக் கொடுக்கும் நீங்கள் வாழ்க! வாழ்க! நட்பு, தயவு, கொடைப் பண்பு இவை எல்லாம் உங்கள் மைந்தனிடம் இருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன். இவன் எதிர்காலத்தில் கொடையாளனாகிப் பேரும் புகழும் பெற வாழ்த்துகின்றேன்; சென்று வருகின்றேன்.

**பல்லவராயர்**:- தமிழ்ப் புலவரே! சென்று வாருங்கள்.

-எ.ஜி.எஸ். மணி
'பள்ளி நாடகங்கள்'

# சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | அரண்மனை | - | රජ මාලිගාව |
| 2. | கதாபாத்திரம் | - | චරිත |
| 3. | சிற்றரசர் | - | ප්‍රාන්ත රජු |
| 4. | அள்ளி வழங்குபவர் | - | අසීමිත පරිත්‍යාගශීලියා |
| 5. | வறுமை | - | දිලිඳුකම |
| 6. | வாடிய | - | මැලවුණු |
| 7. | தங்கத்தேர் | - | රත්තරං තේරුව |
| 8. | உருட்டி | - | පෙරලා |
| 9. | வருகை | - | පැමිණීම |
| 10. | திடுக்கிட்டு | - | ගැස්සී |
| 11. | கடந்து | - | පසු කර ගෙන |
| 12. | இருக்கை | - | අසුන |
| 13. | புண்ணியம் | - | පින |
| 14. | தவம் | - | තපස |
| 15. | கொடைச் சிறப்பு | - | පරිත්‍යාගශීලිබව |
| 16. | எரிந்து | - | පිච්චිලා |
| 17. | வருந்துகின்றேன் | - | පසු තැවෙනවා |
| 18. | கொடைப் பண்பு | - | පරිත්‍යාග ශීලි ගුණාංගය |
| 19. | ஆனந்தக் கண்ணீர் | - | සතුටු කඳුළු |
| 20. | அகமும் முகமும் மலர | - | හදවත මුහුණ සතුටින් පිපි |
| 21. | வள்ளல்/கொடையாளன் | - | දානපතියා |
| 22. | பொற்குவியல் | - | රන්කඳ |
| 23. | நல்வரவு | - | සාදරයෙන් පිළිගනිමු |
| 24. | மறுக்கின்றான் | - | ප්‍රතික්ෂේප කරනවා |
| 25. | மதிப்பு | - | ගෞරවය |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත දී ඇති ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. புலவர் தேடிச் சென்ற அரசன் யார்?

2. புலவர் ஏன் அரசனைத் தேடிச் சென்றார்?

3. புலவர் பரிசை ஏற்றுக் கொள்ளாமைக்கான காரணம் என்ன?

4. மகனிடம் காணப்பட்ட நற்பண்புகள் எவை?

5. உமக்குத் தெரிந்த நான்கு புலவர்களின் பெயர்களை எழுதுக.

### செயற்பாடு - I

**கீழ்க்காணப்படும் சொற்களை ஒழுங்கமைத்துக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுவோம்.**
**පහත සඳහන් වචන ගළපා අර්ථවත් වාක්‍ය හදමු (ලියමු)**

1. வெளியூர் / என் / சென்றுள்ளார் / தந்தையார்.

2. புலவன் / ஒரு / நான் / தமிழ்ப்

3. மகன் / தந்திருக்கின்றான் / பரிசு / என்

4. என்ன? / இல்லாவிட்டால் / நீங்கள்

5. தெரியாது / தங்கத்தின் / குழந்தைதானே / மதிப்பு

# இலக்கணம்

இவ்வாக்கியங்களைக் கவனிப்போம்.

**பெரிய** புத்தகம்
**நல்ல** புத்தகம்

மேலே உள்ள தொடர்களில் **பெரிய, நல்ல** என்ற சொற்கள் புத்தகம் என்ற பெயர்ச்சொல்லுக்கு அடைமொழியாக வந்துள்ளன.

**எப்படிப்பட்ட** என்ற வினாவிற்கு விடையாக அமையக்கூடிய சொற்கள் பெயர் அடைகளாகும்.

இங்கு எப்படிப்பட்ட புத்தகம்? என்ற வினாவிற்கு விடையாக வருவது
பெரிய புத்தகம்
நல்ல புத்தகம்

பெரிய, நல்ல இவை இரண்டும் பெயர் அடைமொழிகளாகும்.

கீழ்க்காணப்படும் சொற்றொடர்களைக் கவனியுங்கள்,

**அழகான** பொம்மை
**உயரமான** மலை
**கசப்பான** மருந்து
**இனிமையான** பாடல்
**பண்பான** ஆசிரியர்

பெயர்ச்சொல்லின் தன்மையை/இயல்பை அறியத்தருவது பெயர் அடைமொழி. அது போல வினைச்சொல்லின் தன்மையை இயல்பை அறியத்தருவது வினை அடைமொழி.

உதாரணம் :-

**வேகமாக** ஓடினாள்.
**இனிமையாகப்** பாடினான்.
**சுவையாக** இருந்தது.
**மெதுவாக** வந்தான்.
**நன்றாகப்** படித்தேன்.
**விரைவாகப்** போகின்றேன்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - II

**கீழே தரப்பட்டுள்ள அடைமொழிகளைக் கொண்டு வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளைப் பூரணப்படுத்துவோம்.**

**(இனிமையான, சுவையாக, உயரமான, வேகமாக, அழகாக)**

1. மயில் தோகை விரித்து **அழகாக** ஆடியது.
2. திருமண வீட்டில் ..................................பாடல்கள் ஒலித்தன.
3. மாமா .................................. தென்னை மரத்தில் ஏறினார்.
4. வீதியில் வாகனம் .................................. சென்றது.
5. அக்கா இன்று காலையில் .................................. சமைத்தார்.

## இலக்கணம்

### வினைச் சொல்

வினைச்சொல் செயலையும் காலத்தையும் காட்டும்.

உதாரணம் :-

சமன் **படித்தான்.**
சமன் **படிக்கிறான்.(படிக்கின்றான்)**
சமன் **படிப்பான்.**

நடந்து முடிந்தவை அல்லது முற்றுப்பெற்ற செயல்களைக் குறிப்பன இறந்தகாலம். (படித்தான்)

நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயல்களைக் குறிப்பன நிகழ்காலம். (படிக்கின்றான்)
செயல் நடைபெற இருப்பதைக் குறிப்பது எதிர்காலம்.(படிப்பான்)


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - III

**பின்வரும் வினையடிகளை, மூன்று காலங்களிலும் வினை முற்றுக்களாக மாற்றி எழுதுங்கள்.**

(படி, எழுது, சாப்பிடு, செய், எறி, ஆடு, ஓடு, வளர்)

உதாரணம் :-

சாப்பிடு → சாப்பிட்டார்
சாப்பிடு → சாப்பிடுகின்றார்
சாப்பிடு → சாப்பிடுவார்

## செயற்பாடு - IV

**பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள எழுவாய்களுக்கு ஏற்ற வினைமுற்றுக்களை எழுதுவோம்.**

| எழுவாய் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நான் | குடித்தேன் | குடிக்கின்றேன் | குடிப்பேன் |
| நாங்கள் | குடித்தோம் | குடிக்கின்றோம் | குடிப்போம் |
| நீ | | | |
| நீர் | | | |
| நீங்கள் | | | |
| அவன் | | | |
| அவள் | | | |
| அவர் | | | |
| அவர்கள் | | | |
| அது | | | |
| அவை | | | |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - V

**அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புங்கள்.**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| பெய்தது | பெய்கின்றது | பெய்யும் |
| .................... | ......................... | சாப்பிடுவார் |
| .................... | எழுதுகின்றேன் | ........................... |
| செய்தேன் | ......................... | ............................ |
| வளர்ந்தது | ............................ | ........................... |
| ...................... | ஆடுகிறாள் | ........................... |

## செயற்பாடு - VI

**பின்வரும் இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங் களாகவும், எதிர்கால வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுவோம்.**

1. புலவரின் குழந்தைகள் பட்டினியால் வாடினார்கள்.

.......................................................................................................................

.......................................................................................................................

2. நான் உன்னிடம் பரிசு பெற வந்தேன்.

.......................................................................................................................

.......................................................................................................................

3. புலவர் ஒருவர் பல்லவராயரைக் காணவந்தார்.

......................................................................................................................

......................................................................................................................

4. புலவர் பெருமானின் வறுமை அறிந்து மிகவும் வருந்தினேன்.

......................................................................................................................

......................................................................................................................

5. பல்லவராயரும் மனைவியும் தமது மகனைப் பெருமிதத்துடன் பார்த்தனர்.

......................................................................................................................

......................................................................................................................